4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

8. திருநெல்வேலி மற்றும் சேலம் கூட்டுறவு நூற்பாலைகளினால் விற்பனை செய்யப்பெறும் செயற்கை இழை நாலுக்கு விற்பனை வரி மற்றும் மேல் வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 30—5—1990-ஆம் நாளிட்ட 330-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

9. நிதித் (முதலமைச்சரின் பொது நிவாரண நிதி) துறையினால் விற்பனை செய்யப் பெறும் தரமான தங்கத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7—11—90-ஆம் நாளிட்ட 645-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. காட்பாடி, திருவாளர்கள் ஒர்த் பிளாஸ்டிக் நிறுவனத்தால் விற்கப் பெறும் பிளாஸ்டிக்குகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11-12-1990-ஆம்நாளிட்ட 712-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

11. வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14—5—90-ஆம் நாளிட்ட II(1)/ வ.வ.ச.அ./84/90 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 16–11–1990 ஆம் நாளிட்ட 665-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

12. சென்னை-41, பாலவாக்கத்திலுள்ள ஊனமுற்றோர்களுக்கான 'லைப் ஹெல்ப்' நிறுவனத்தினரால் விற்கப் பெறும் பொம்மைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 16—11—1990-ஆம் நாளிட்ட 663-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை.